# மினிப்பே பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூன் 19 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள மினிப்பே பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்தான 07 காணிகளின் பெறுமதி கணிப்பிபடப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குப்பை முகாமைத்துவப் பிரிவை நிர்மாணிப்பதற்கு உரித்தான சான்றுறுதிப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களின் வேலைப் பெறுமதியான ரூபா 2,844,708 தொகை மூலதனமாக்கப்பட்டிராததுடன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியான ரூபா 1,896,472 தொகை கடன்கொடுனராக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த பணிக்கான துணைக்கட்டுநிதிக் கணக்குகளின் ரூபா 39,846 தொகையான செலவு மீதி ஏற்படுவதற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 296,583 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 390,000 |

### 2.2.3 நீர்க் கட்டணம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீர்க் கட்டண நிலுவை ரூபா 1,587,262 தொகையானதுடன் இது ஆண்டின் பட்டியலிடல்களில் 78 சதவீதமாகக் காணப்பட்டது. நீர் தொடர்பு உடன்படிக்கை நிபந்தனை இல. iv இன் பிரகாரம், நீரிற்காக ஒவ்வொரு மாத நீர்ப் பட்டியல்களில் குறிப்பிடப்பட்ட விலை அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் சபைக்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்பட்டிராமையால் நீர்த் தொடர்பு உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது அத்தகைய எவ்வித நீர்த் தொடர்பும் துண்டிக்கப்பட்டிருக்கவில்லை. பிரதேச சபையால் செயற்படுத்தப்படும் 06 நீர்த் திட்டங்களில் 1486 நீர்ப் பாவனையாளர்கள் காணப்பட்ட போதிலும் நீர் மானிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டமையால் நிலையான கட்டணம் அறவிடப்படும் பாவனையாளர்களின் எண்ணிக்கை 827 ஆகக் காணப்பட்டது. இது நீர்ப் பாவனையாளர் எண்ணிக்கையின் சதவீதமாக எடுக்கப்படுகையில் 56 சதவீதமாகும். செயற்பாடற்ற நீர் மானிகள் மீளச் செயற்பாட்டு நிலைக்கு வருவதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

சபைக்குரிய ரூபா 2,004,305 பெறுமதியான சொத்துக்கள் எவ்வித செயற்பாட்டிற்கும் ஈடுபடுத்தப்படாது 01 ஆண்டு முதல் 06 ஆண்டுகள் வரையான காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.